தேவன் கோவில் மணியோசை -
ஓம் ஓமென ஒலிக்கும் மணியோசை
வாவென்றழைத்தே வல்வினை தீர்த்து
வாழ்வளித்தருளும் மணியோசை

அய்யா அமலா அருள் புரிவாய்
என்றவன் தாளில் பணிவோர்க்கு
தேவா தேவா எனுமோர்க்குரலில்
அபயம் அளிக்கும் மணியோசை
பிறவி துயரம் தீர்க்கும் மணியோசை
திருப் பதந்தனில் சேற்கும் மணியோசை

சும்மா இருப்பது சுகமென்றுணர்த்தி
அன்பாயுரைப்பது மணியோசை
அம்மையும் தானாய் அப்பனும் தானாய்
இம்மையில் வாழ்விக்கும் மணியோசை
அது தானாய் ஒலிக்கும் மணியோசை
திரு ஞானக்குரவன் அருளோசை